





# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387

உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்

ANANDA BHASKAR

www.anandabhaskar.com








சென்னை மலர்: 01 இதழ்: 200 14.01.2026 புதன்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 200 | Wednesday | pages 4 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

புதன்கிழமை
(14-01-2026)
விசுவாவசு ஆண்டு, மார்கழி -30
பிறை: தேய்பிறை
திதி
ஏகாதசி இரவு 07.43 வரை
பிறகு துவாதசி
நட்சத்திரம்:
அனுஷம் மறுநாள்
விடியற்காலை 04.55 வரை
பிறகு கேட்டை
யோகம்
சித்த யோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00-1.30 மணி
எமகண்டம்
காலை 7.30 – 9.00 மணி
சூலம் – வடக்கு
நல்ல நேரம் :
காலை 6-7 மணி
மாலை 4-5 மணி

மேஷம் ........ லாபம்
ரிஷபம் ........ அன்பு
மிதுனம் ........ நிம்மதி
கடகம் ........ பக்தி
சிம்மம் ........ ஆதாயம்
கன்னி ........ தனம்
துலாம் ........ விவேகம்
விருச்சிகம் ........ ஆதரவு
தனுசு ........ பணிவு
மகரம் ........ தெளிவு
கும்பம் ........ நன்மை
மீனம் ........ பயணம்

# பொங்கல் பண்டிகை விழா: மக்கள் சொந்த ஊருக்கு பயணம்



**சென்னை,ஜன.14:**

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை நாளை கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி வெளியூர்களில் வசிப்பவர்கள் தங்களது சொந்த ஊர் சென்று பண்டிகையை கொண்டாட தயாராகி வருகின்றனர்.

சென்னையில் இருந்து வெளியூர் செல்வதற்காக பயணிகளின் வசதிக்காக வழக்கமான அரசு பஸ்களோடு, சிறப்பு பஸ்களும் இயக்கப்படுகிறது.

அந்த வகையில் கடந்த 9-ந் தேதி முதல் நேற்று வரை அதாவது 4 நாட்களில் மொத்தம் 11 ஆயிரத்து 372 பஸ்கள் இயக்கப்பட்டதில் 4 லட்சத்து 88 ஆயிரத்து 780 பயணிகள் பயணம் செய்துள்ளனர். அத்துடன் இதுவரை 2 லட்சத்து 56 ஆயிரத்து 977 பயணிகள் முன்பதிவு செய்து பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழக மீனவர்கள் 10 பேர் கைது!



**ராமேசுவரம்,ஜன.14:**

அனுமதிச் சீட்டு பெற்று கடலுக்குச் சென்ற ராமேசுவரத்தை சேர்ந்த 10 மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினர் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

மேலும், அவர்களின் விசைப் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

நெடுந்தீவு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட மீனவர்களை காரைநகர் கடற்படை முகாமில் வைத்து இலங்கை படையினர் விசாரணை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகம் மற்றும் புதுச்சேரி மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடிக்கும் குற்றத்துக்காக தொடர்ந்து இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்து வருகின்றனர்.

மேலும், அவர்கள் செல்லும் விசைப்படகுகளையும் பறிமுதல் செய்து நாட்டுமையாக்கி வருகின்றனர். கைது செய்யப்படும் மீனவர்களை விடுவிப்பதற்கு பல லட்சம் ரூபாய் அபராதமாக இலங்கை நீதிமன்றம் விதித்து வருகின்றது.


தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி தொடர்ந்து நரேந்திர மோடி மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின கடிதம் எழுதி வருகிறார்.

# புதிய உச்சம் □தாட்ட தங்கம் வி□ல

**சென்னை,ஜன.14:**

சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை காலை, மாலை என இருவேளைகளில் உயர்ந்து வரலாறு காணாத உச்சத்தில் விற்பனையாகிறது. இதனால் சுபநிகழ்ச்சிகளுக்காக தங்கம் வாங்க நினைப்போருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில், வார தொடக்க நாளான நேற்றும் தங்கம் விலை அதிரடியாக கிராமுக்கு 220 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.13,120-க்கும் சவரனுக்கு 1,760 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 960 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி விலையும் நேற்று ஒரே நாளில் கிராமுக்கு 12 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம்



வெள்ளி 287 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 87 ஆயிரம் ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

இதனை தொடர்ந்து இன்றும் தங்கம் உயர்ந்துள்ளது. கிராமுக்கு 50 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.13,170-க்கும் சவரனுக்கு 400 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 360 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. இதன்மூலம் தங்கம் புதிய உச்சத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்துக்கு போட்டியாக வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. அந்த வகையில், இன்று கிராமுக்கு 5 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி 292 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கடைசி ஐந்து நாள் தங்கம் விலை நிலவரம்:-

12-1-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,04,960
11-1-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,03,200
10-1-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,03,200
9-1-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,02,400
8-1-2026- ஒரு பவுன் (22 காரட்) ரூ.1,02,000

# 'நாங்கள் போரை நாடவில்லை; ஆனால்...' - ஈரான் கூறுவது என்ன?

**தெஹ்ரான்,ஜன.14:**

"ஈரான் போருக்கு முழுமையாகத் தயாராக உள்ளது. அதேநேரத்தில் பேச்சுவார்த்தைக்கும் தயாராக இருக்கிறது" என்று அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்தார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற வெளிநாட்டுத் தூதர்களின் மாநாட்டில் அரசு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட உரையில் பேசிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, "ஈரான் இஸ்லாமியக் குடியரசு போரை நாடவில்லை; ஆனால், போருக்கு முழுமையாகத் தயாராக உள்ளது. நாங்கள் பேச்சுவார்த்தைக்கும் தயாராக இருக்கிறோம்.

ஆனால், அந்தப் பேச்சுவார்த்தைகள் நியாயமானதாகவும், சம உரிமைகளுடனும், பரஸ்பர மரியாதையின் அடிப்படையிலும் இருக்க வேண்டும்.

நாடு தழுவிய போராட்டங்களுக்குப் பிறகு நிலைமை தற்போது முழுமையான கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தப் போராட்டங்கள், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தலையிடுவதற்கு ஒரு சாக்குப்போக்கு அளிக்கும் வகையில் வன்முறை மற்றும் ரத்தக்களரியாக மாறியது" எனத் தெரிவித்தார்.



அப்பாஸ் அராக்சி இன்று தெஹ்ரானில் உள்ள வெளிநாட்டுத் தூதர்களிடம் பேசினார். நாட்டில் இணையம் துண்டிக்கப்பட்டிருந்தபோதிலும், செயல்பட அனுமதிக்கப்பட்ட கத்தார் நிதியுதவி பெறும் அல்ஜசீரா செயற்கைக்கோள் செய்தி நிறுவனம் அராக்சியின் கருத்துகளை ஒளிபரப்பியது.

ஈரான் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் நாணய மதிப்பு வீழ்ச்சி ஆகியவற்றுக்கு அந்நாட்டில் கடந்த சில வாரங்களாக போராட்டம் நடந்து வருகிறது. இந்தப் போராட்டத்தின் காரணமாக அந்நாட்டில் 490 போராட்டக்காரர்கள் மற்றும் 48 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்துள்ளதாகவும், 10,600-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அமெரிக்காவைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பான ஹெச்ஆர்ஏஎன்ஏ (HRANA) தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் அமெரிக்காவும் இஸ்ரேலும் இப்பிரச்சினையைத் தூண்டிவிடுவதாக ஈரான் அரசு குற்றம் சாட்டியுள்ளது.

மேலும், "அமெரிக்கா மற்றும் இஸ்ரேலால் வழிநடத்தப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளை" கண்டித்து இன்று (திங்கட்கிழமை) நாடு தழுவிய பேரணிக்கு அழைப்பு விடுத்ததாக அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

# ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25% உடனடி வரி

**அமெரிக்கா,ஜன.14:**

உலக அமைதிக்கு ஊறு விளைவிக்கும் வகையில் செயல்படும் நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டிரம்ப் கடுமையான வரிகளை விதித்து வருகிறார்.

ரஷியா - உக்ரைன் இடையேயான போருக்கு இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் கச்சா எண்ணெய் வாங்குவதே காரணம் எனக் கூறிய அவர் இந்தியாவுக்கு முதலில் 25 சதவிகித வரியும் பின்னர், கூடுதல் 25 சதவிகித வரிவிதித்தார். டிரம்ப்பின் நடவடிக்கையை மீறிய இந்தியா, சீனாவுக்கு கூடுதலாக 500 சதவிகித வரி விதிப்பு குறித்த மசோதாவுக்கு அவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்த நிலையில், ஈரான் தொடரும் போராட்டங்கள், பொருளாதார நெருக்கடி காரணமாக அந்த அரசுக்கு உள்ள அழுத்தம் அதிகரித்துள்ளது.



அமெரிக்காவுக்கு எதிராகப் பேசிவந்த வெனிசுவேலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை அந்த நாட்டுக்குள்ளேயே நுழைந்து அமெரிக்க ராணுவத்தினர் கைது செய்த சம்பவம் ஈரான் போராட்டக்காரர்களுக்கு மேலும் உத்வேகம் அளித்துள்ளது.

இந்தச் சூழலில், போராட்டக்காரர்கள் மீது ஈரான் அரசு மேற்கொள்ளும் அடக்குமுறைக்கு தண்டனையாக அந்த நாட்டின் மீது புதிய பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்த நிலையில், ஈரானுடன் வர்த்தகம் செய்யும் அனைத்து நாடுகளுக்கும் 25 சதவிகித உடனடி வரிவிதித்து உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அதிபர் டிரம்ப் தனது ட்ரூத் சோஷியல் பக்கத்தில் பதிவு ஒன்றையும் பகிர்ந்துள்ளார்.

அந்தப் பதிவில், "ஈரானின் இஸ்லாமிய குடியரசுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்ய உடனடியாக 25 சதவிகித வரிவிதிக்கப்பட்டுள்ளது. உடனடியாக அமலுக்கு வந்த இந்த வரிவிதிப்பானது இறுதியானது மற்றும் உறுதியானது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரிவிதிப்பால், இந்தியா, துருக்கி, சீனா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகள் கடுமையாகப் பாதிக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# மாணவர்கள் தங்கள் அறிவையும் திறனையும் நாட்டுக்கு சேவை செய்ய அர்ப்பணிக்க வேண்டும்: சிபிஆர்

**புதுடெல்லி,ஜன.14:**

ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றுச் செல்லும் மாணவர்கள் தங்கள் அறிவையும், திறனையும், நாட்டுக்கு சேவை செய்வதில் அர்ப்பணிக்க வேண்டும். கல்வி என்பது வெறும் பட்டங்களை வழங்குவதோடு நின்றுவிடாமல், நற்பண்புகளை வளர்ப்பதாகவும், அறிவை வலுப்படுத்துவதாகவும், ஒவ்வொரு தனிமனிதனும் தன் சொந்தக் காலில் நிற்பதற்குத் தேவையான தன்னம்பிக்கையைத் தருவதாகவும் அமைய வேண்டும்.



கல்வி, முறையான பயிற்சி மட்டுமே, 2047-ல் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற பிரதமர் மோடியின் தொலைநோக்கை இளைஞர்கள் நனவாக்க உதவும். நாலந்தா, தட்சசீலம் போன்ற கல்வி மையங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை, கவுடில்லியரின் அர்த்த சாஸ்திரம், திருவள்ளுவரின் திருக்குறள் போன்றவை கற்றலைச் சமூக மற்றும் அறநெறி வாழ்வின் மையமாக முன்னிறுத்தி வந்துள்ளன. உண்மையான கல்வி என்பது பட்டம் பெறுவது மட்டும் அல்ல, அது நம் நடத்தையையும் குணத்தையும் செம்மைப்படுத்துகிறது.

விவாதம், ஆலோசனை, முரண்பாடுகள் ஆகியவை ஆரோக்கியமான ஜனநாயகத்தின் முக்கியமான அம்சங்கள். இவை இறுதியில் ஒரு முடிவுக்கு வழிவகுக்க வேண்டும். முடிவெடுத்தவுடன், அவற்றை அமல்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்த முடியும்.

உண்மையை அறிவதில் நேர்மை, சமத்துவமின்மையைக் குறைக்க சமூக உள்ளடக்கம் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கான தீவிர பங்களிப்பு ஆகிய மூன்று முக்கிய பொறுப்புகளை பட்டதாரிகள் பின்பற்ற வேண்டும். மாணவர்கள் எப்போதும் பெற்றோரையும், ஆசிரியர்களையும் மதிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தில் நகைக் கடைகளுக்கு ஹிஜாப் அணிந்து வரத் தடையா? - அரசு விளக்கம்



**சென்னை, ஜன.14:** பீகாரில் நகைக்கடைகளில் பெண்கள் முகத்தை மூடி வர தடை விதிக்கப்பட்டது. அதே போல் உ.பி. வாரணாசியிலும் ஹிஜாப் அணிந்து வர நகைக்கடைகள் தடை விதித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் ஹிஜாப் அணியும் இஸ்லாமிய பெண்களுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே, தமிழகத்தில் நகைக் கடைகளுக்கு ஹிஜாப் அணிந்து வரத் தடை சமூக ஊடகங்களில் தகவல்கள் பரவி வருகின்றன.


ஆனால் இது தவறான தகவல் என தமிழ்நாடு அரசு தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது. இதுகுறித்து வெளியிட்டுள்ள பதிவில், "நகைக்கடைகளில் ஹிஜாப் அணிந்து வரத் தடை - தமிழ்நாட்டில் அல்ல!

'பாதுகாப்பு காரணங்களுக்காக ஹிஜாப் அணிந்து வருவோருக்கு நகை விற்பனை செய்யமாட்டோம்' என்று நகை வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளதாக வதந்தி பரவி வருகிறது.

ஆனால், நகைக் கடைகளுக்கு ஹிஜாப் அணிந்து வரத் தடை என சமூக ஊடகங்களில் பரவி வரும் தகவல் உண்மையல்ல. சமூக ஊடகங்களில் தவறான தகவல் பரப்பப்படுகிறது.

உத்தரப் பிரதேச மாநிலம் வாரணாசியில் உள்ள நகைக்கடைகளில் ஹிஜாபுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக செய்திகளில் வெளியாகி இருக்கிறது. தமிழ்நாட்டில் அல்ல. தவறான தகவலைப் பரப்பாதீர்!" என்று கூறப்பட்டுள்ளது.

# 'ரெயில் ஒன்' செயலி மூலம் முன்பதிவில்லாத டிக்கெட் எடுப்பவர்களுக்கு 3 சதவீத கட்டண சலுகை- இன்று முதல் அமல்




**சென்னை, ஜன.14:** ரெயில்வேயில் முன்பு தனித்தனியாக இருந்த ஐ.ஆர்.சி.டி.சி, யூ.டி.எஸ், என்.டி.இ.எஸ் போன்ற பல செயலிகளின் சேவைகளை ஒருங்கிணைத்து ரெயில்வே அமைச்சகம் 'ரெயில் ஒன்' என்ற செயலியை அறிமுகம் செய்தது.

இந்த செயலியின் மூலம் முன்பதிவு டிக்கெட், முன்பதிவில்லாத டிக்கெட், பிளாட்பார டிக்கெட், ரெயில் வரும் நேரம், புறப்படும் நேரம் ஆகியவற்றை தெரிந்து கொள்ள முடியும். ரெயில்வே துறை மற்றும் ரெயில் நிலையங்கள், ரெயில் பெட்டிகளில் உள்ள குறைகள் குறித்து புகார் தெரிவிக்க முடியும். சீசன் டிக்கெட்டும் இந்த செயலி மூலம் பெற முடியும்.

இந்நிலையில் ரெயில் ஒன் செயலி மூலம் முன்பதிவில்லாத டிக்கெட் எடுப்பவர்களுக்கு 3 சதவீத கட்டண சலுகையை ரெயில்வே அறிவித்துள்ளது. அதாவது, ரெயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் கவுண்ட்டர் கூட்டத்தில் முண்டியடித்து செல்வதற்கு பதிலாக செல்போன் செயலி மூலம் டிக்கெட் எடுப்பதை ஊக்குவிக்க இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த கட்டண சலுகை கியூ.ஆர். கோடு மூலம் கட்டணம் செலுத்துபவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்தது. தற்போது முன்பதிவில்லாத சாதாரண டிக்கெட்டுகளை ரெயில் ஒன் செயலி மூலம் டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துபவர்கள் அனைவருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஆர்-வாலட் மூலம் பணம் செலுத்துபவர்களுக்கு டிக்கெட் கட்டணத்தில் 3 சதவீதம் திரும்ப பெறும் நடைமுறையில் எந்த மாற்றமும் இல்லை. எனவே, ரெயில் ஒன் செயலி மூலம் முன்பதிவில்லாத டிக்கெட் எடுக்கும் அனைத்து பயணிகளுக்கும் நாளை முதல் வருகிற ஜூலை மாதம் 14-ந் தேதி வரை 3 சதவீதம் கட்டண சலுகை வழங்கப்படுகிறது.

தென்னக ரெயில்வே மண்டலம் தற்போது 29.5 சதவீதம் செல்போன் செயலி மூலம் முன்பதிவில்லாத டிக்கெட் வழங்கி சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே சாதாரண டிக்கெட்டுகளுக்கு யூ.டி.எஸ். செயலி பயன்படுத்துபவர்கள் ரெயில் ஒன் செயலியை பதிவிறக்கம் செய்து அதன் மூலம் டிக்கெட் எடுக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனால், செல்போனில் டிக்கெட் பதிவு செய்தும், முழுமையடையாமலும், அது குறித்த தகவல் கிடைக்கப்பெறாததாலும், அபராதம் செலுத்துவதில் இருந்து தப்பிக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

# வாணியம்பாடி அருகே திடீரென லாரி கொழுந்துவிட்டு எரிந்ததால் பரபரப்பு



**திருப்பத்தூர், ஜன.14:** அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் சிமெண்ட் மிக்சிங் லாரியை ஆந்திரா மாநிலம் நெல்லூர் பகுதிக்கு ஓட்டிச் சென்று கொண்டிருந்தார். அப்போது திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த கேதண்டபட்டி அருகே லாரியை சாலை ஓரம் நிறுத்தி விட்டு லாரியின் முகப்பு பகுதியில் கேஸ் அடுப்பில் குக்கர் மூலம் சமையல் செய்து கொண்டிருந்தார்.

அப்போது எதிர்பாராத விதமாக திடீரென குக்கர் வெடித்து சுரேஷ் படுகாயம் அடைந்து லாரியின் முகப்பு பகுதியில் இருந்து கீழே குறித்து உயிர் தப்பினார். இதனை தொடர்ந்து லாரி கொழுந்துவிட்டு எரிய தொடங்கியது. அப்போது திடீரென லாரியில் இருந்த சிலிண்டரும் அதிக சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதன் காரணமாக தேசிய நெடுஞ்சாலையில் சிறிது நேரம் லாரி கொழுந்துவிட்டு எரிந்தது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு நாட்றம்பள்ளி தீயணைப்புத் துறையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர். மேலும் நாட்றம்பள்ளி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று லாரி ஓட்டுனர் சுரேஷ் மற்றும் உதவியாளர் கோகுல் ஆகியோரை மீட்டு சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## கீழ்ப்பாக்கத்தில் ரவுடி வெட்டிக்கொல்லப்பட்ட சம்பவம்:

# குற்றவாளிகளை பிடிக்க 9 தனிப்படைகள் அமைப்பு



**சென்னை, ஜன.14:** சென்னை கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் தோழியை பார்க்க வந்த பிரபல ரவுடி ஆதி என்ற ஆதிகேசவனை 6 பேர் கொண்ட கும்பல் நேற்று சரமாரியாக வெட்டிக்கொலை செய்தது. இந்த கொலை சம்பவம் தொடர்பாக கூடுதல் போலீஸ் கமிஷனர் நரேந்திரன் நாயர் நிருபர்களிடம் கூறியதாவது:-

ஆதி என்ற ஆதிகேசவன் உள்பட சிலர் ஆஸ்பத்திரியின் பிரசவ வார்டுக்கு எதிரே அமர்ந்து மது குடித்துவிட்டு அங்கேயே தூங்கி உள்ளனர். அவர்களை போலீசார் ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேற அறிவுறுத்தியும் வெளியேறவில்லை. ஆதிகேசவன் சரித்திர பதிவேடு குற்றவாளி. 2022-ம் ஆண்டு நடந்த கொலை வழக்கில் 2 ஆண்டுகள் சிறையில் இருந்து விட்டு தற்போது தான் வெளியே வந்தார். ஆதி இருக்கும் இடத்தை அவருடன் இருந்த சிலரே கொலைகார கும்பலிடம் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவத்தில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகளை கைது செய்ய 9 தனிப்படை அமைத்துள்ளோம்.

பழிக்கு பழியாக இந்த கொலை நடந்துள்ளது என முதல்கட்ட புலன் விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவம் நடந்த நேரத்தில் ஆஸ்பத்திரியில் ரோந்து பணியில் இருந்த போலீசார் உள்பட போலீஸ் அதிகாரிகள் மீது துறை ரீதியிலான நடவடிக்கை எடுக்கப்படும். இரவு பணியில் 10 போலீசார் இருந்தனர். அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவர்கள் மீது கட்டாயம் நடவடிக்கை பாயும். இவ்வாறு அவர் கூறினார்.

# டெல்லி சிபிஐ தலைமை அலுவலகத்தில் ஆஜரான விஜய்யிடம் 7 மணி நேரம் விசாரணை



**சென்னை, ஜன.14:** கரூர் கூட்ட நெரிசல் விவகாரம் தொடர்பாக டெல்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்தில் நேற்று ஆஜரான தவெக தலைவர் விஜய்யிடம் அதிகாரிகள் 7 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

கரூர் மாவட்டம் வேலுசாமிபுரத்தில் கடந்த 2025 செப்.27-ம் தேதி தவெக தலைவர் விஜய் கலந்துகொண்ட பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். 110-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உச்ச நீதிமன்ற உத்தரவின்பேரில், இந்த சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது. சம்பவம் நடந்த வேலுசாமிபுரத்தில் ஆய்வு மேற்கொண்டும், 200-க்கும் மேற்பட்டோரிடம் விசாரணை நடத்தியும் பல்வேறு ஆதாரங்களை சிபிஐ அதிகாரிகள் திரட்டினர்.

டெல்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்துக்கு தவெக பொதுச் செயலாளர் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சிடிஆர். நிர்மல் குமார் உள்ளிட்ட நிர்வாகிகளை வரவழைத்து, அதிகாரிகள் சுமார் 20 மணி நேரம் விசாரணை நடத்தினர். கரூர் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. விஜய் பிரச்சாரம் மேற்கொண்ட பேருந்

தையும் சிபிஐ மற்றும் மத்திய தடயவியல் ஆய்வக நிபுணர்கள் ஆய்வு செய்தனர். அதில் பொருத்தப்பட்டுள்ள நவீன கண்காணிப்பு கேமராக்கள், அதில் பதிவான காட்சிகள் குறித்து பேருந்து ஓட்டுநர் பரணிதரனிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இதற்கிடையே, டெல்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்தில் ஜன.12-ம் தேதி (நேற்று) விசாரணைக்கு ஆஜராகுமாறு விஜய்க்கு சிபிஐ கடந்த 6-ம் தேதி சம்மன் அனுப்பியது. சென்னையில் இருந்து விஜய் நேற்று காலை 7.40 மணிக்கு தனி விமானம் மூலம் டெல்லி புறப்பட்டுச் சென்றார். அவருடன் தவெக தேர்தல் பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, இணை பொதுச் செயலாளர் சிடிஆர்.நிர்மல்குமார், உதவியாளர் ராஜேந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள், வழக்கறிஞர்களும் சென்றனர்.

டெல்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்தில் விஜய் காலை 11.30 மணி அளவில் விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம் அதிகாரிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பினர். குறிப்பாக, மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்காக திட்டமிடப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ன? இதுதொடர்பாக காவல் துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்திடம் என்னென்ன தகவல்கள் பரிமாறப்பட்டன? 10 ஆயிரம் பேருக்கு அனுமதி வாங்கப்பட்ட நிலையில், 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டதா? திட்டமிட்ட நேரத்தைவிட சுமார் 7 மணி நேரம் தாமதமாக வந்தது ஏன்? உங்கள் வருகை தாமதம் ஆனதால் மக்கள் நீண்ட நேரம் காத்திருந்ததே நெரிசலுக்கு காரணம் என்ற புகாருக்கு உங்கள் விளக்கம் என்ன? என்பது உட்பட பல கேள்விகளை அதிகாரிகள் எழுப்பியுள்ளனர்.

சிபிஐ வசம் இருநத பிரச்சார நிகழ்வு தொடர்பான வீடியோ காட்சிகள், ட்ரோன் கேமரா பதிவுகளை காண்பித்த அதிகாரிகள், அந்த சூழலில் கூட்டத்தை கட்டுப்படுத்த ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என விளக்கம் கேட்டனர். கூட்டத்தின் நடுவே பிரச்சார வாகனம் சென்ற விதம், அதன் வேகம், அதனால் ஏற்பட்ட நெரிசல் குறித்து ஓட்டுநரிடம் ஏற்கெனவே நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் விஜய்யிடம் குறுக்கு விசாரணையும் நடத்தப்பட்டது.

விஜய் பதில்கள் வீடியோவில் பதிவு: சிபிஐ அதிகாரிகளின் அடுக்கடுக்கான கேள்விகளுக்கு விஜய்யும் சளைக்காமல் பதில் அளித்துள்ளார். குறிப்பாக, அதிகாரிகளின் கேள்விகளுக்கு விஜய் மிக நிதானமாக பதில் அளித்ததாகவும், விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கியதாகவும் கூறப்படுகிறது. அதேநேரம், விசாரணையின் நடுவே சட்ட ரீதியான சில நுணுக்கங்களை விளக்க அவரது வழக்கறிஞர்கள் குழுவும் அங்கு தயாராக இருந்தது. விஜய் அளித்த பதில்களை சிபிஐ அதிகாரிகள் எழுத்துப் பூர்வமாகவும், வீடியோவாகவும் பதிவு செய்து கொண்டனர்.

விசாரணைக்கு நடுவே, விஜய்க்கு ஒரு மணி நேரம் உணவு இடைவேளை வழங்கப்பட்டது. பின்னர், விசாரணை தொடர்ந்து நடைபெற்றது. மாலை 6.15 மணி அளவில் விசாரணை முடிந்த பிறகு, காரில் விஜய் புறப்பட்டுச் சென்றார். வழக்கமாக, கட்சி சார்ந்த நிகழ்வுகள், மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளுக்கு விஜய் வெள்ளை சட்டை, காக்கி பேன்ட் அணிந்து செல்வார். நேற்று விசாரணைக்கு கருப்பு சட்டை, பேன்ட் அணிந்து வந்திருந்தார். அவரது வருகை காரணமாக சிபிஐ அலுவலகத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

டிஜிபி, ஐஜியிடமும் தீவிர விசாரணை: டெல்லி சிபிஐ அலுவலகத்தில் விஜய்யிடம் விசாரணை நடந்த அதே நேரத்தில், தமிழக ஆயுதப்படை டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம், சென்னை தலைமையிட கூடுதல் காவல் ஆணையர் ஜோஷி நிர்மல் குமார் ஆகியோரிடமும் சிபிஐ அதிகாரிகள் சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

கரூர் நெரிசல் சம்பவத்தின்போது, சட்டம் - ஒழுங்கு ஏடிஜிபியாக இருந்தார் டேவிட்சன் தேவாசீர்வாதம். நெரிசல் நடந்த இடத்துக்கு சென்ற இவர், செய்தியாளர்களை சந்தித்து சம்பவம் தொடர்பாக விரிவாக விளக்கி பேட்டி அளித்திருந்தார். இதனால், இவரிடமும் சிபிஐ அதிகாரிகள் விசாரித்துள்ளனர்.

அதேபோல, நெரிசல் சம்பவம் நடந்தபோது, திருச்சி மத்திய மத்திய மண்டல ஐ.ஜி.யாக இருந்தவர் என்பதால், ஜோஷி நிர்மல் குமாரிடமும் விசாரணை நடை பெற்றுள்ளது. பொங்கல் விடுமுறை முடிந்த பிறகு, தேவைப்பட்டால் மீண்டும் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என கூறி சிபிஐ அதிகாரிகள் இவர்களை அனுப்பி வைத்ததாக கூறப்படுகிறது.

## அரசியல் கார்னர்

# அண்ணா பற்ற வைத்த தீயை யாராலும் அழிக்க முடியாது..!- உதயநிதி ஸ்டாலின்



**சென்னை, ஜன.14:** சென்னையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றியதாவது:-

இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்கும் தமிழ்நாடு இந்தி திணிப்பை எதிர்க்கும். ஒரு வரலாறை இங்கே சொல்ல விரும்புகிறேன். 1968ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா முதலமைச்சர் ஆனபோது ஒரு வேலையை செய்தார். அதைப் பற்றி சட்டசபையிலும் பேசி பதிய வைத்திருக்கிறார்.

சுயமரியாதை திருமணங்களுக்கு சட்ட வடிவம் கொடுத்தார். தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிக் கொள்கையே தவிர, தமிழ்நாட்டில் எப்போதும் மும்மொழிக் கொள்கைக்கு அனுமதி கிடையாது என்றார்.

தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தார். அதற்கு முன்பு வரை சென்னை பிரசிடென்ஸி என்று இருந்தது.

இதை மூன்றையும் செய்துவிட்டு அண்ணா சொன்னார், நான் ஆட்சியில் இருப்பதனால் இந்த மூன்று திட்டத்தையும் அமல்படுத்தினேன்.

பிற்காலங்களில், யாராவது இதை மாற்ற வேண்டும் என்று நினைத்தார்கள் என்றால், அவர்கள் மனதில் பயம் வரும். அந்த பயம் இருக்கும் வரை இந்த தமிழ்நாட்டை ஆள்வது அண்ணாதுரைதான் என்றார்.

நம் அண்ணா வடிவில் இன்றைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பின்பற்றி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அண்ணா பற்ற வைத்த தீயை யாராலும் அழிக்க முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

# தடையை மீறி கல்லத்தி மரத்துக்கு செல்ல முயற்சி: திருப்பரங்குன்றத்தில் எச்.ராஜா கைது



**மதுரை, ஜன.14:** மதுரை திருப்பரங்குன்றம் மலையில் உள்ள காசி விசுவநாதர் கோவிலில் சாமி தரிசனம் செய்வதற்காக நேற்று மாலையில் பா.ஜனதா தேசிய செயற்குழு உறுப்பினர் எச்.ராஜா வந்தார். பின்னர் அவர் தனது ஆதரவாளர்களுடன் மலையில் ஏறி சென்றார். அப்போது கல்லத்தி மரம் உள்ள இடத்திற்கு செல்ல முயன்றார். ஆனால் அங்கு பாதுகாப்புக்கு நின்ற போலீசார் எச்.ராஜாவை தடுத்து நிறுத்தி அங்கு செல்லக்கூடாது எனக்கூறினர். இருப்பினும் அவரும், உடன் வந்த பா.ஜனதாவினர் மலை பாதையில் ஏற முயன்றனர்.

போலீசார் அவர்களை மலை பாதையில் ஏறவிடாமல் கயிறு கட்டி தடுத்தனர். இதனால், போலீசாருக்கும், அவர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. மேலும் கல்லத்தி மரத்தில் கட்டிய கொடியை அகற்றுங்கள் அல்லது அப்பகுதிக்கு எங்களை அனுமதியுங்கள் என்று கேட்டார். அதற்கு போலீசார் மறுத்தனர்.

இதையடுத்து எச்.ராஜா மற்றும் பா.ஜனதாவினர் மலை பாதையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 2 மணி நேரத்திற்கு மேல் போராட்டம் நீடித்தது. அங்கு கூடுதல் போலீசார் வரவழைக்கப்பட்டு குவிக்கப்பட்டனர்.இதை தொடர்ந்து மாலை 6.45 மணி அளவில் எச்.ராஜா மற்றும் பா.ஜனதாவினரை போலீசார் மலையில் இருந்து கீழே அழைத்து வந்தனர். பின்னர் மலை அடிவாரம் பழனியாண்டவர் கோவில் வளாகத்தில் போலீஸ் வேன் கொண்டு வரப்பட்டது. அப்போது எச்.ராஜா மற்றும் மதுரை மேற்கு மாவட்ட தலைவர் சிவலிங்கம், திருப்பரங்குன்றம் தொகுதி பொறுப்பாளர் ராக்கப்பன் உள்பட 12 பேரை போலீசார் கைது செய்தனர்.

# மதுரையில் சமத்துவ நடைபயணம்- வைகோவை வரவேற்ற அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன்

**திருச்சி, ஜன.14:** திருச்சியில் கடந்த 2-ந்தேதி ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ போதைப்பொருள் ஒழிப்பு, மத மோதல் தடுப்பு உள்ளிட்டவற்றை வலியுறுத்தி சமத்துவ நடைபயணம் தொடங்கினார். இதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

திருச்சியிலிருந்து நடைபயணம் தொடங்கிய வைகோ புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் நடைபயணத்தை மேற்கொண்டார். அவருடன் துரை வைகோ எம்.பி., மற்றும் முக்கிய நிர்வாகிகள் 100 தொண்டர்கள் என 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். நாள்தோறும் வைகோ 15 முதல் 17 கிலோ மீட்டர் நடைபயணம் மேற்கொண்டார். நேற்று முன்தினம் மதுரை மாவட்டம் மேலூர் பகுதிக்கு வைகோ வந்தார். அப்போது கட்சியினர் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பின்னர் அவர் உத்தங்குடியில் உள்ள திருமண மண்டபத்தில் நேற்றைய பயணத்தை முடித்துக் கொண்டார். தொடர்ந்து இன்று 11-வது நாள் நடைபயணமாக காலை ஒத்தக்கடையில் இருந்து மதுரை நகரை நோக்கி தனது நிறைவு நடைபயணத்தை வைகோ தொடங்கினார்.

இன்று மாலை மதுரை ஒபுளா படித்துறையில் வைகோ தனது நடை பயணத்தை நிறைவு செய்கிறார். இந்நிலையில், மதுரையில் சமத்துவ நடைபயணம் மேற்கொண்டுள்ள வைகோவை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் வரவேற்றார்.

அண்ணா நகர், தெப்பக்குளம், கீழ வெளி வீதி வழியாக செல்லும் அவர் இன்று மாலை 6 மணிக்கு தனது பயணத்தை நிறைவு செய்கிறார் என்பது குறிப்பிடதக்கது.


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
We Build Your
DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visit Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Just499
NEWS WEBSITE
PORTAL
We Provide Complete News
Website Portal Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com
BREAKING NEWS


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

# கவிதை அரங்கம்!



நம்பிக்கை என்பது
சூரியனை
போல அதை நோக்கி
நாம் செல்லச் செல்ல
மனச்சுமை என்ற நிழல்
நம் பின்னால் போய்விடும்

ஊதி விடப்பட்ட பலூன்
உயரத்தில் தான் பறக்கும்
உதறித்தள்ளப்பட்ட நீயும்
உயரத்தில் பற

நம்மால் நேற்றை சரிசெய்ய
முடியாது
ஆனால் நாளையை
உருவாக்க முடியும்

விழுந்த அடிகளை
படிகளாக நினைத்தால்
எந்த உயரத்தையும்
தொட்டு விடலாம்

எண்ணம் உறுதியாக
இருந்தால் எண்ணியபடி
உயரலாம் நமது எண்ணம்
தான் நம்முடைய
எதிர்காலத்தை
உருவாக்குகிறது

## வாழ்க்கை தத்துவம்...



தண்ணீரை போல்
இருங்கள்
அதனால்
ஒதுங்கி செல்லவும் முடியும்
உடைத்தெறியவும் முடியும்

இருந்தால் உறவு
பிரிந்தால் நினைவு
அம்புட்டு தான்
இந்த வாழ்க்கை

தேடி அலைந்து
கொண்டே இரு
வேண்டியது கிடைக்கும் வரை
அது உன் அருகில் இருந்தால்
அதிர்ஷ்டம்
தூரத்தில் இருந்தால்
நம்பிக்கை
கிடைக்காமல் போனால்
அனுபவம்

# "கடைசிக் கணக்கு"



தெற்குத் தெருவில் மாடசாமியின் வீடு மட்டும் எப்போதும் திறந்தே இருக்கும். வாசலுக்குக் கதவு இருந்தது, ஆனால் மாடச்சாமியின் மனசுக்குக் கதவு இல்லை. அதற்கு பதில் ஈரங் கொண்ட நெஞ்சம் இருந்தது.

தன்னிடம் கஷ்டமென்று சொல்லி யார் வந்து கடன் கேட்டாலும் கேள்வி கேட்காமல் கொடுப்பான். அதற்கு கணக்குக்கூட வைத்துக் கொள்ள மாட்டான்.

ஒரு காலை நேரத்தில் கந்தன் வந்து நின்றான். கண்களில் கண்ணீர், "பத்தாயிரம் போதும் அண்ணே..." குரல் தட்டுத் தடுமாறியது.

மாடசாமி ஏதுவும் கேட்கவில்லை. பையிலிருந்து பணம் எடுத்தான்.

"உன் கஷ்டமெல்லாம் தீர்ந்த பிறகு திருப்பிக் குடு போதும்" என்றான் கந்தன் கையில் திணித்தபடி.

அந்தக் கடன் விவகாரம் அந்த இரண்டு உயிர்களுக்குள் மட்டுமே புதைந்திருந்தது.

ஒரு காலை நேரத்தில் மாடசாமி கண்களை மூடிக் கொண்டான்.

தெற்குத் தெரு முழுக்க அன்று சோகம் பூசிக் கொண்டது.

ஆனால், சாவு வீட்டில் ஒரு விசித்திரம் நடந்தேறியது. அவரிடம் கடன் வாங்கியவர்கள் வரிசை கட்டி வந்து தாங்கள் தர வேண்டிய தொகையை வைத்துச் சென்றார்கள்.

"இனி இவரோட காசு நம்ம கையில இருக்கக் கூடாது" என்று சொல்லிக் கொண்டே.

ஆனால், கந்தன் மட்டும் அந்த வரிசையில் இல்லை.

அவன் மனசுக்குள் ஒரு சிறிய சத்தம். "நான் கடன் வாங்கியது என்னையும் மாடசாமியையும் தவிர வேற யாருக்கும் தெரியாது... இது எழுதப்படாத கடன் வேற... எப்படியும் செத்தவன் எழுந்து வந்து கேட்க மாட்டான்...அதனால நாமளே அமுக்கிட வேண்டியதுதான்!"

மனச்சாட்சியை மண்ணோடு மண்ணாக மாடசாமியோடு அடக்கம் செய்தான்.

சுடுகாட்டுச் சடங்குகள் முடிந்ததும் மண் சமமானது. அழுகைகளும் நின்றன.

கந்தன் ஒரு வித திருப்தியுடன் திரும்பி நடந்தான். அப்போதுதான் அது நடந்தது. கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடி வந்தது மாடசாமியின் மாடு.

கண்களில் பசி இல்லை. பயம் இல்லை. ஒரே இலக்கு கடைசிக் கணக்கு.

அடுத்த நொடியில் கந்தன் தரையில். வயிற்றில் கொம்பு. ரத்தச்சகதி.

மருத்துவமனையில் தீவிர சிகிச்சை மேற்கொண்ட பின் உயிர் தப்பினான் கந்தன்.

பில் கையில் வந்தது..சரியாக ரூபாய் 10,001/- ஒரு ரூபாய் வட்டிக்காக.

கந்தன்.படுக்கையில் கிடந்தபடி மாடசாமியை நினைத்தான்.

""உன் கஷ்டமெல்லாம் தீர்ந்த பிறகு திருப்பிக் குடு போதும்" என்ற மாடசாமியின் குரல் இப்போது ரத்தத்தோடு பேசிக் கொண்டிருந்தது.

சில கடன்களுக்கு கணக்கு எழுத மனிதன் வேண்டாம்... காலமே போதும்.

(முற்றும்)

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*"எம்பிளாய்மெண்ட் ஆபிசிலே நீ பதியறதுக்கு, உன்னோட அப்பா, தாத்தாவையும் கூட்டிட்டு வந்திருக்கியே! ஏன்?"*

*"அப்பாவுக்குப் புதுப்பிக்கணும்... எங்க தாத்தாவுக்கு முதல் இண்டர்வியூ வந்திருக்கு!"*

# தினம் ஒரு சமையல்



## சிக்கன் நூடுல்ஸ்

**தேவையான பொருட்கள்:**


| | |
|---|---|
| சிக்கன் | - 100 கிராம் |
| லூஸ் நூடுல்ஸ் | - 1 பாக்கெட் |
| வெங்காயம் | - 100 கிராம் |
| பச்சை மிளகாய் | - 2 |
| மிளகுத்தூள் | - அரை தேக்கரண்டி |
| சர்க்கரை | - 1/4 தேக்கரண்டி |
| சோயா சாஸ் | - 1 தேக்கரண்டி |
| தக்காளி சாஸ் | - 1 தேக்கரண்டி |
| உப்பு, எண்ணெய் | - போதுமான அளவு |

**செய்முறை:**



1. சிக்கனை நன்றாக சுத்தம் செய்து, வேக வைத்து தனியாக எடுத்துக் கொள்ளவும். அகலமான கடாயில் நீர் ஊற்றி நூடுல்சை வேக வைத்து தனியாக எடுத்துக் கொள்ளவும்.
2. ஒரு கடாயில் எண்ணை ஊற்றி காய்ந்ததும், பொடியாக நறுக்கிய வெங்காயம், மிளகாய் ஆகியவற்றை சேர்த்து நன்றாக வதக்கவும். பின் வேக வைத்த சிக்கன் மற்றும் நூடுல்ஸை சேர்க்கவும்.
3. சோயா சாஸ், தக்காளி சாஸ், மிளகுத் தூள் போதுமான அளவு உப்பு சேர்த்து கடைசியில் சர்க்கரை சேர்த்து கிளறி இறக்கவும்.

## நெருஞ்சி பயன்கள்



வணக்கம் நண்பர்களே. இன்றைய ஆரோக்கியம் பதிவில் நெருஞ்சில் முள் பொடியின் நன்மைகள் பற்றி தெரிந்து கொள்ளாலாம் வாங்க. நெருஞ்சில் செடி என்பது சாலையோரங்களிலும் வயல்வெளியில் படர்ந்து வளர்ந்து இருக்கும் மூலிகை செடி ஆகும். இச்செடியில் எண்ணற்ற மருத்துவ குணங்கள் உள்ளது. இதில் நம் உடலிற்கு தேவையான இன்றையமையாத சத்துக்களான இரும்புச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ் போன்றவை உள்ளது.

நெருஞ்சில் செடி மூன்று வகைப்படும். அதாவது, சிறு நெருஞ்சில், யானை நெருஞ்சில் (பெருநெருஞ்சில்) மற்றும் செப்பு நெருஞ்சில் என மூன்று வகைகளில் உள்ளது. இச்செடி முட்செடி என்றும் அழைக்கப்படுகிறது. இதன் மேற்பகுதியில் சிறு சிறு முற்கள் காணப்படும். இச்செடியின் இலை, வேர்,காய், பூ, தண்டு, மற்றும் முள் ஆகிய அனைத்தும் மருத்துவகுணம் மிக்கவை. இந்த இலையில் அதிக அளவு இரும்புசத்து, கால்சியம், பாஸ்பரஸ் போன்ற ஊட்டச்சத்துக்கள் உள்ளன. ஆகையால், இவற்றின் நன்மைகள் பற்றி இப்பதிவின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

நெருஞ்சி முள்ளை ஒரு குறிப்பிட்ட அளவு சேகரித்து அதனை பாலுடன் சேர்த்து வேகவைத்து எடுத்து கொள்ளவும். அதன் பிறகு, அதனை நன்கு உலர்த்தி பொடியாக தயாரித்து, பாலுடன் 1/2 ஸ்பூன் கலந்து தினமும் காலை மாலை என இருவேலையும் அருந்தி வருவதன் மூலம், ஆண்மை பெருகும். நெருஞ்சில் ஆண்களுக்கு ஏற்படும் சிறுநீர் கடுப்பு, விதைப்பை வீக்கம் போன்ற பல பிரச்சனைகளுக்கு தீர்வாக உள்ளது.

சிறுநீரக கல் கரைய

யானை நெருஞ்சில் காயை காயவைத்து உலர்த்தி கஷாயம் போல் செய்து தினமும் குடித்து வந்தால் சிறுநீரக கல் நீங்கும். நெருஞ்சில் அனைத்தையும் அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து எருமை தயிரில் கலந்து காலை ஒரு வேலை மட்டும் குடித்துவருவதன் மூலம் சிறுநீரகம் சம்மந்தபதப்பட்ட அனைத்து பிரச்சனைகளை நீங்கும்.

வெள்ளைப்படுதல் நீங்க:

நெருஞ்சில் இலைகளை இடித்து பொடி செய்து காலை மாலை என இரண்டு வேலையும் பாலில் சேர்த்து, சிறிதளவு நாட்டுச்சர்க்கரை கலந்து குடித்து வர வெள்ளைப்படுதல் நீங்கும். மேலும், வயிற்று சம்மந்தப்பட்ட பிரச்சனைகளும் நீங்கும்.

உடல் உஷ்ணம் குறைய

நெருஞ்சில் செடி மற்றும் அருகம்புல் சிறிதளவு சேர்த்து, தண்ணீர் விட்டு காய்ச்சி கஷாயம் போல் குடித்து வர உடல் உஷ்ணம் நீங்கும். மேலும், உடல் உஷ்ணத்தால் உண்டாகும் கண் எரிச்சல், கண் சூடு மற்றும் வயிற்று வலி போன்றவை குணமாகும்.

மஞ்சள் காமாலை:

மஞ்சள் காமாலை என்றாலே அனைவருக்கும் கீழாநெல்லி செடிதான் பயன்படுத்துவது என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் நெருஞ்சில் செடியும் மஞ்சள் காமாலைக்கு மருந்தாக பயன்படுத்துகிறார்கள். கீழாநெல்லி வேரும் நெருஞ்சில் வேரும் சமஅளவு எடுத்து பொடியாக அரைத்து மோர் அல்லது இளநீரில் சேர்த்து குடித்து வந்தால் மஞ்சள் காமாலை பிரச்சனை குணமாகும்.

## சினிமா

# லோகேஷ் கனகராஜ் அடுத்த பட சம்பளம்! புது உச்சம்.. எத்தனை கோடி பாருங்க!



இயக்குனர் லோகேஷ் கனகராஜ் தற்போது கூலி படத்திற்கு பிறகு எந்த புது படத்தையும் அறிவிக்காமல் இருக்கிறார். அடுத்து அவர் ஹீரோவாக DC படத்தில் நடித்து வருகிறார். அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் அந்த படம் உருவாகி வருகிறது.

இந்நிலையில் தெலுங்கில் டாப் ஹீரோவாக இருக்கும் அல்லு அர்ஜூன் உடன் லோகேஷ் அடுத்து கூட்டணி சேர போகிறார்.

இந்த படத்திற்காக லோகேஷ் கனகராஜுக்கு 75 கோடி ரூபாய் சம்பளமாக தரப்படுவதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

தற்போது அல்லு அர்ஜுனை இயக்கி வரும் அட்லீக்கு 100 கோடி ரூபாய் சம்பளமாக தரப்படுவது குறிப்பிடத்தக்கது.



மாளவிகா பிரபல இதழின் அட்டைப்படத்திற்கு மிகவும் கவர்ச்சியாக போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

பல விதமான் ஹாட் உடைகளில் அவர் இருகும் அந்த ஸ்டில்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது. இதோ பாருங்க.

# பராசக்திக்கு வெளிநாட்டில் குவியும் வசூல்.. எவ்வளவு தெரியுமா? அமரன் படத்தை விட அதிகம் தான்



சிவகார்த்திகேயனின் பராசக்தி படம் கடந்த ஜனவரி 10ம் தேதி ரிலீஸ் ஆகி இருந்தது. ஹிந்தி எதிர்ப்பு போராட்டதற்கு மையப்படுத்தி எடுக்கப்பட்ட இந்த படமும் ஜனநாயகன் போல சென்சாரில் பிரச்சனைகளை சந்தித்தது.

ஆனால் பல வசனங்களை மியூட் செய்யவும், சில காட்சிகளை நீக்கவும் படத்தின் தரப்பு ஒப்புக்கொண்டதால் சென்சார் சான்றிதழ் வழங்கப்பட்டது.

முதல் நாளில் உலக அளவில் 27 கோடி ரூபாய் பராசக்தி வசூலித்து இருக்கிறது.

இதில் வெளிநாட்டில் வந்த வசூல் பெரிய பங்கு ஆகும்.

பராசக்தி வெளிநாட்டில் மட்டும் 12.8 கோடி ரூபாய் வசூல் வந்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இது சிவகார்த்திகேயனின் அமரன் பட வசூலை விட அதிகம்.

குறிப்பாக UKவில் முதல் நாளில் மட்டும் £87,842 வசூல் வந்திருப்பதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வந்திருக்கிறது. இது இந்திய ரூபாய் மதிப்பில் 1.06 கோடி ரூபாய் ஆகும்.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com**